# கலை IAS அகாடமி

61/1 காந்தி நகர் ,மோகனூர் ரோடு

நாமக்கல்- 637001

கிளைகள்: கரூர், திருப்பூர், ஈரோடு, சேலம்,திருச்சி

www.kalaiiasacademy.com kalaiiasacademy2013@gmail.com

Ph: 7373036676,7373046676,7373056676


Kalai IAS Academy

# சாதனையாளர்களின் சரித்திர கூடம்

# Kalai IAS Academy

61/1, Gandhi Nagar, Mohanur Road, Namakkal - 637 001.

Mobile : 73730 46676, 73730 36676

Email : kalaiiasacademy2013@gmail.com Web : www.kalaiiasacademy.com


## மாதிரி தேர்வு - I

## 2016

## பொதுத் தமிழும் பொது அறிவும்

அனுமதிக்கப்பட்டுள்ள நேரம் : 3 மணி) (மொத்த மதிப்பெண்கள் : 30C

வினாக்களுக்கு பதிலளிக்குமுன் கீழ்க்கண்ட அறிவுரைகளை படிக்கவும்

மாணவர் அறிவுரைகள்

1. இந்த வினாத் தொகுப்பு ஒரு மேலுறையை கொண்டுள்ளது. தேர்வு தொடங்கும் நேரத்தில் வினாத் தொகுப்பைத் திறக்கும்படி கண்காணிப்பாளர் கூறும் வரையில் மேலுறையைத் திறக்க கூடாது. வினாத் தொகுப்பைத் திறக்கும் படியான செய்கை கண்காணிப்பாளரிடமிருந்து பெற்றவுடன் மேலுறையின் வலதுபுறத்தை கவனமாக கிழித்துத் திறக்க வேண்டும். அதன்பின் கேள்விகளுக்கு விடையளிக்கத் தொடங்கலாம்.
2. இந்த வினாத் தொகுப்பு 200 வினாக்களைக் கொண்டுள்ளது. இவ்வினாத்தொகுப்பில் எல்லா வினாக்களும் விடுபடாமல் வரிசையாக இடம் பெற்றுள்ளனவா என்பதையும், இடையில் ஏதேனும் வெற்றுத்தாள்கள் உள்ளனவா என்பதையும் சரிபார்த்துக் கொள்ளவும். ஏதேனும் குறைபாடு இருப்பின், அதனை அறை கண்காணிப்பாளரிடம் தெரிவிக்கவும்.
3. எல்லா வினாக்களுக்கும் விடையளிக்கவும். எல்லா வினாக்களும் சமமான மதிப்பெண் கொண்டவை.
4. ஒவ்வொரு வினாவும் (A), (B), (C) மற்றும் (D) என நான்கு விடைகளைக் கொண்டுள்ளது. நீங்கள் அவைகளில் ஒரே ஒரு சரியான விடையைத் தேர்வு செய்து விடைத்தாளில் குறித்து காட்ட வேண்டும். ஒன்றுக்கு மேற்பட்ட சரியான விடைகள் ஒரு கேள்விக்கு இருப்பதாக கருதினால் நீங்கள் மிகச் சரியானது என்று எதைக் கருதுகிறீர்களோ அந்த விடையை விடைத்தாளில் குறித்து காட்ட வேண்டும். எப்படியாயினும் ஒரு கேள்விக்கு ஒரே ஒரு விடையைத்தான் தேர்ந்தெடுக்க வேண்டும். உங்களுடைய மொத்த மதிப்பெண்கள் நீங்கள் விடைத்தாளில் குறித்து காட்டும் சரியான விடைகளின் எண்ணிக்கையைப் பொறுத்தது.
5. விடைத்தாளில் ஒவ்வொரு கேள்வி எண்ணிற்கும் Ⓐ Ⓑ Ⓒ மற்றும் Ⓓ என நான்கு விடை வட்டங்கள் உள்ளன. ஒரு கேள்விக்கு விடையளிக்க நீங்கள் சரியென கருதும் விடையை ஒரே ஒரு விடை வட்டத்தில் மட்டும் நீலம் அல்லது கருமை நிறமையுடைய பந்து முனைப் பேனாவினால் குறித்துக் காட்ட வேண்டும். ஒவ்வொரு கேள்விக்கும் ஒரு விடையைத் தேர்ந்தெடுத்து விடைத்தாளில் குறிக்க வேண்டும். ஒரு கேள்விக்கு ஒன்றுக்கு மேற்பட்ட விடையளித்தால் அந்த விடை தவறானதாக கருதப்படும்.
6. நீங்கள் வினாத் தொகுப்பின் எந்தப் பக்கத்தையும் நீக்கவோ அல்லது கிழிக்கவோ கூடாது. தேர்வு நேரத்தில் இந்த வினாத் தொகுப்பினையோ அல்லது விடைத்தாளையோ தேர்வுக் கூடத்தை விட்டு வெளியில் எடுத்துச் செல்லக்கூடாது.
7. குறிப்புகள் எழுதிப் பார்ப்பதற்கு வினாத் தொகுப்பின் கடைசி பக்கத்திற்கு முன்பக்கத்தை உபயோகித்துக் கொள்ளலாம்.
8. வினாத் தொகுப்பில் விடையை குறியிடவோ, குறிப்பிட்டுக் காட்டவோ கூடாது.

[Turn over

KALAI IAS ACADEMY

KALAI IAS ACADEMY

1. இலக்கணக் குறிப்பறிந்து பொருத்துக.

(a) வினைத்தொகை - 1. தண்கடல்

(b) பண்புத் தொகை - 2. அலர்கொன்றை

(c) இரு பெயரொட்டுப் பண்புத்தொகை - 3. அவைக்களம்

(d) உவமைத் தொகை - 4. வானரக்கன்

(e) உருவகம் - 5. உளக்கோவில்

| | a | b | c | d | e |
|---|---|---|---|---|---|
| (A) | 4 | 5 | 3 | 1 | 2 |
| (B) | 5 | 4 | 3 | 2 | 1 |
| **(C)** | **2** | **1** | **3** | **4** | **5** |
| (D) | 2 | 1 | 3 | 5 | 4 |

2. வில்லிப்புத்தூராரை ஆதரித்த வள்ளல் யார்?

(A) சந்திரன் சுவர்க்கி **(B) வரபதி ஆட்கொண்டான்**

(C) சடையப்ப வள்ளல் (D) முதலாம் குலோத்துங்க சோழன்

3. செய்யுளின் ஓசை குறையும் போது சொல்லின் முதலிலும் இடையிலும் ஈற்றிலும் நிற்கும் நெட்டெழுத்துக்கள் தமக்குரிய இரண்டு மாத்திரை அளவிலிருந்து நீண்டு ஒலிக்கும் எழுத்துக்கள் எத்தனை?

(A) 3 (B) 9 **(C) 7** (D) 6

4. மானவிஜயம் நாடகம் எந்த இலக்கியத்தை அடிப்படையாகக் கொண்டு இயற்றப்பட்டது?

(A) கலிங்கத்துப்பரணி (B) கார் நாற்பது

(C) ரூபாவதி **(D) களவழி நாற்பது**

KALAI IAS ACADEMY

5. அன்னை கஸ்தூரிபாயின் எளிமையான தோற்றத்தினால் கவரப்பட்டு எளிமையாக வாழ்ந்தவர் யார்?

(A) அஞ்சலையம்மாள் **(B) அம்புஜத்தம்மாள்**

(C) வை.மு. கோதைநாயகி (D) மூவலூர் ராமாமிர்தம்

6. பொருத்துக.

| நூல் | | புலவர் | | a | b | c | d | e |
|---|---|---|---|---|---|---|---|---|
| (a) பெருங்கதை | - | 1. வீரமாமுனிவர் | | | | | | |
| (b) நளவெண்பா | - | 2. உமறுப்புலவர் | (A) | 4 | 5 | 3 | 1 | 2 |
| (c) பெரிய புராணம் | - | 3. சேக்கிழார் | **(B)** | **5** | **4** | **3** | **1** | **2** |
| (d) தேம்பாவணி | - | 4. புகழேந்திப் புலவர் | (C) | 2 | 1 | 3 | 4 | 5 |
| (e) சீறாப்புராணம் | - | 5. கொங்குவேள் | (D) | 2 | 1 | 3 | 5 | 4 |

7. அகர வரிசைப்படி சரியான விடையைத் தேர்க.

(A) கலம், களம், குலம், குளம், காலை, காளை

(B) களம், குலம், காலை, காளை, குளம், கலம்

(C) காலை, கலம், குலம், காளை, களம், குளம்

**(D) கலம், களம், காலை, காளை குலம், குளம்**

8. பொருந்தாத இணையைக் காண்க.

(a) சூளாமணி - 1. தோழாமொழித்தேவர்

(b) இயேசு காவியம் - 2. கண்ணதாசன்

**(c) பூங்கொடி - 3 பாரதிதாசன்**

(d) யசோதர காவியம் - 4. வெண்ணாவலூர் உடையார்வேள்

KALAI IAS ACADEMY

9. தவறான ஒன்றைத் தேர்ந்தெடு.

(A) இன்னிசையளபெடை - கெடுப்பதூஉம்

(B) செய்யுளிசையளபெடை - படாஅர்

(C) சொல்லிசை அளபெடை - தழீஇ

**(D) ஒற்றளபெடை - வாழ்ழ்க்கை**

10. தவறான மரபுச்சொல்லைக் கண்டறிக.

(A) வாழைக்கச்சல் (B) யானைக்கன்று

(C) பன்றி உறுமும் **(D) ஓவியம் வரைந்தான்**

11. இலக்கியச் செய்திகளோடு அறிவியல் துறைப் பொருள்களையும் முதன்முதலாகச் சேர்த்து வெளியிட்ட அகராதி நூல் எது?

(A) தமிழ்ப்பேரகராதி (B) அபிதான கோசம்

**(C) அபிதான சிந்தாமணி** (D) சங்க அகராதி

12. சரியான இணையைத் தேர்ந்தெடு.

(A) தமிழன் தொன்மையை உலகறியச் செய்தவர் - பாவாணர்

**(B) தனித்தமிழுக்கு வித்திட்டவர் - பரிதிமாற்கலைஞர்**

(C) தமிழைத் தழைக்கச் செய்த செம்மல் - கால்டுவெல்

(D) தமிழை ஆளென வளர்த்து மாண்புறச் செய்தவர் - மறைமலையடிகள்

13. எண்ணும்மை, முற்றும்மை, இழிவு சிறப்பும்மை, வரிசையில் எடுத்துக்காட்டுகளைத் தேர்க.

(A) வாவியும் பூவையும், இரண்டும், எந்நாடும்

**(B) தாளமும் மேளமும், யார் மாட்டும், வயிற்றுக்கும்**

(C) உடலும் உயிரும், எல்லா அறமும், முப்பழமும்

(D) தாளமும் மேளமும், செய்தார்க்கும், எனைத்தும்

KALAI IAS ACADEMY

14. பெற்றதாய் தனை மறந்தாலும்

பிள்ளை யைப்பெறுந் தாய் மறந்தாலும்

- என்ற பாடல்வரி இடம் பெற்ற நூல்?

(A) கண்ணன் பாட்டு

(B) அழகின் சிரிப்பு

**(C) திருவருட்பா**

(D) பெண்ணின் பெருமை

15. விடைக்கேற்ற வினாவைத் தேர்க.

"திருவாசகத்திற்கு உருகார் ஒரு வாசகத்திற்கும் உருகார் என்பர் சான்றோர்"

(A) திருவாசகத்தின் பெருமை எவ்வாறு போற்றப்படுகிறது?

(B) திருவாசகத்தின் பெருமை கூறும் பழமொழி யாது?

(C) திருவாசகத்தை சான்றோர் எவ்வாறு போற்றினர்?

**(D) திருவாசகத்தின் பெருமையை சான்றோர் எவ்வாறு உணர்த்தினர்?**

16. பதினெட்டு சிற்றூர்களையும் கைப்பற்றி மலைநாடு வென்றவன் யார்?

(A) விஜயாலயச் சோழன்

(B) இராஜேந்திரச் சோழன்

(C) சோழன் செங்காணன்

**(D) முதலாம் இராசராசன்**

17. பொருத்துக.

| | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|
| (a) இளங்கொடி | - | 1. பிடாரி | **(A)** | **2** | **1** | **4** | **3** |
| (b) கன்னியர்களில் இளையவள் | - | 2. கொற்றவை | (B) | 2 | 1 | 3 | 4 |
| (c) இறைவனை நடனமாடச் செய்தவள் | - | 3. துர்க்கை | (C) | 4 | 3 | 2 | 1 |
| (d) அசுரனின் மார்பைப் பிளந்தவள் | - | 4. பத்ரகாளி | (D) | 4 | 3 | 1 | 2 |

(column heads for the answer options: a b c d)

KALAI IAS ACADEMY

18. கலைச்செல்வி கட்டுரை எழுதாமல் இராள் என்பது.

(A) எதிர்மறை வாக்கியம் (B) உடன்பாட்டு வாக்கியம்

(C) செய்தி வாக்கியம் **(D) பொருள் மாறா எதிர்மறை வாக்கியம்**

19. ஒலி வேறுபாடு அறிந்து பொருத்துக.

| <u>வாலை</u> | | <u>வாழை</u> | | <u>வாளை</u> |
|---|---|---|---|---|
| (A) மூங்கில் | - | மரவகை | - | வெட்டும் கருவி |
| (B) இளம்பெண் | - | மரவகை | - | ஓசை |
| (C) ஒரு பறவை | - | மரவகை | - | ஓசை |
| **(D) இளம்பெண்** | **-** | **மரவகை** | **-** | **மீன்வகை** |

20. எழுத்து என்பதற்கு ஓவியம் என்ற பொருள் உண்டு என்று கூறும் நூல்கள்?

(A) பரிபாடலும் கலித்தொகையும்

(B) கலித்தொகையும் தொல்காப்பியமும்

(C) தொல்காப்பியமும் குறுந்தொகையும்

**(D) குறுந்தொகையும் பரிபாடலும்**

21. கற்போரின் மனதில் உள்ள அறியாமையை நீக்கி அவரை குன்றின் மேலிட்ட விளக்காகச் சமுதாயத்தில் விளங்க செய்யும் நூல் எது?

**(A) திரிகடுகம்** (B) ஏலாதி

(C) சிறுபஞ்ச மூலம் (D) நாலடியார்

22. கீழ்கண்ட பாடல் வரிகளில் குறுந்தொகை பாடல் வரி அல்லாதது எது?

(A) செம்புலப் பெயர் நீர் போல

(B) வினையே ஆடவர்க்கு உயிரே வாள்நுதல்

(C) கொங்குதேர் வாழ்க்கை அஞ்சிறைத் தும்பி

**(D) நெடிய மொழிதலும் கடிய ஊர்தலும்**

KALAI IAS ACADEMY

23. ‘மக்கட் பேறு’ எவ்வகைப் பெயர்ச் சொல் எனக் காண்க.

(A) பொருட்பெயர்

(B) தொழிற் பெயர்

**(C) முதனிலை திரிந்த தொழிற்பெயர்**

(D) முதனிலை தொழிற்பெயர்

24. கீழ்க்கண்ட இணையைக் காண்க.

(I) ஜனங்கள் - வடமொழி

(II) அபாண்டம் - மராத்தி மொழி

(III) மைதானம் - பாரசீகம் மொழி

(IV) குஷி - உருது மொழி

(A) I தவறு

(B) II தவிர அனைத்தும் சரி

(C) II மற்றும் IV சரி

**(D) I, II, III, IV சரி**

25. உமர்கய்யாம் பாடல்கள் பற்றிய கூற்றுகளில் தவறானது எது?

(A) இவரது பாடல்கள் வாழ்க்கைத் தத்துவத்தை விளக்குகிறது

(B) இந்நூல் இம்மை மறுமை பற்றி ரூபாய்த் என்னும் பெயரில் நான்கடிச் செய்யுளாகும்

(C) இவரின் கவிதைகள் மக்கள் அடையும் இன்ப துன்பங்களையும், இறைவனது படைப்பையும் பாடு பொருளாகக் கொண்டவை

**(D) இப்பாடல்களை தமிழில் மொழி பெயர்த்தவர் பரஞ்சோதி முனிவர்**

26. பிற மொழிச் சொற்களற்ற வாக்கியம் தேர்க.

(A) பகவான் கிருபையால் உயிர் வாழ்கிறேன்

(B) நாளை இந்தச் சட்டம் அமலுக்கு வருகிறது

**(C) புனித நன்னாளில் புதுமனைப் புகுவிழா நடந்தது**

(D) அவர்கள் வீட்டு விசேடத்திற்குச் சென்றிருந்தேன்

KALAI IAS ACADEMY

27. பொருத்துக.

(a) சுந்தர பாண்டியன் - 1. மாணிக்க வாசகர்

(b) உக்கிர குமார பாண்டியன் - 2. திருஞான சம்பந்தர்

(c) கூன் பாண்டியன் - 3. செவ்வேள்

(d) அரிமர்த்தன பாண்டியன் - 4. சிவபெருமான்

| | a | b | c | d |
|---|---|---|---|---|
| **(A)** | **4** | **3** | **2** | **1** |
| (B) | 3 | 4 | 1 | 2 |
| (C) | 2 | 1 | 3 | 4 |
| (D) | 1 | 2 | 4 | 3 |

28. பண்புத் தொகை பற்றிய தகவல்களில் சரியானதைத் தேர்க.

(A) சொல்லின் முதல் பகுதி பண்பினை குறிக்கும்

(B) சொல்லின் இரண்டாவது பகுதி பெயர்ச் சொல்லைக் குறிக்கும்

(C) பண்புப் பெயருக்கும் பெயர் சொல்லுக்கும் இடையே "மை" விகுதி மறைந்து வருவது பண்புத் தொகை ஆகும்

**(D) மேற்கண்ட அனைத்தும் சரி**

29. பரிதிமாற் கலைஞரின் நாடகவியல் என்ற நூலின் வடிவம் காண்க.

**(A) செய்யுள் வடிவம்** (B) உரைநடை வடிவம்

(C) இலக்கண வடிவம் (D) கூத்துக்கலை வடிவம்

30. " இந்தியன் சஞ்சிகையில்" தமிழ் மொழி பற்றிய ஆராய்ச்சிக் கட்டுரைகளை எழுதியவர்?

**(A) ஜி.யு. போப்** (B) வீரமாமுனிவர் (C) கால்டுவெல் (D) பரிதிமாற்கலைஞர்

KALAI IAS ACADEMY

31. கீழ்கண்டவற்றைக் கவனி.

இரண்டு சொல்லாக வரும், முதலில் உள்ள சொல் பொருளைக் குறிக்கும், இரண்டாவது சொல் உவமையைக் குறிக்கும், இடையில் உவம உருபு மறைந்து வருவது எது?

**(A) உருவகம்** (B) உவமைத்தொகை

(C) உவமேயம் (D) உவமானம்

32. உரிய விடையைத் தேர்க. வன்றனி

(A) வன் + தனி (B) வல் + தனி

**(C) வன்மை + தனி** (D) வன் + றனி

33. “மதிமன்னும் மாயவன் வாள்முகம் ஒக்கும்

கதிர்சேர்ந்த ஞாயிறு சக்கரம் ஒக்கும்”

- மேற்கண்ட பாடலில் அமைந்துள்ள தொடைகளின் அடிப்படையில் சரியானது எது?

(A) அடி எதுகை வந்துள்ளது

(B) சீர் எதுகை வந்துள்ளது

**(C) அடியெதுகையும் அடிஇயைபும் வந்துள்ளன**

(D) சீர்மோனை மட்டும் வந்துள்ளது

34. மேல்வாயை நாக்கின் நுனி தடவுவதனால் பிறக்கின்ற எழுத்துக்கள்?

(A) ல், ள் (B) த், ந்

**(C) ர், ழ்** (D) ந், ன்

35. பொருந்தாத பொருளைக் காண்க. அருஞ்சொற் பொருள்

(A) அழுக்காறு - பொறாமை

(B) அண்டர் - தேவர்

(C) அணங்கு - பெண்

**(D) அள்ளல் - கடல்**

KALAI IAS ACADEMY

36. சோறு பற்றிய பதம் இடம் பெற்ற நூல்களைப் பொருத்துக.

| | | | | a | b | c | d |
|---|---|---|---|---|---|---|---|
| (a) வல்சி | - | 1. சீவக சிந்தாமணி | (A) | 1 | 4 | 2 | 3 |
| (b) உண்டி | - | 2. மலைபடுகடாம் | (B) | 4 | 3 | 1 | 2 |
| (c) பொம்மல் | - | 3. புறநானூறு | (C) | 4 | 3 | 2 | 1 |
| (d) புழுங்கல் | - | 4. நாலடியார் | **(D)** | **3** | **4** | **2** | **1** |

37. கயனெடுங்கண் எவ்வாறு பிரியும்

(A) கயன் + நெடுங்கன்

(B) கயல் + நெடுங்கன்

(C) கயன் + நெடுமை + கண்

**(D) கயல் + நெடுமை + கண்**

38. தவறானதைக் கண்டறிக.

(A) கற்ற பெண்களின் சிறப்பைக் கூறுவது - குடும்பவிளக்கு

(B) கல்லாத பெண்ணின் இழிவைக் கூறுவது - இருண்டவீடு

**(C) பொதுவுடைமையை வலியுறுத்துவது - தமிழியக்கம்**

(D) இயற்கையை வருணிப்பது - அழகின் சிரிப்பு

39. பொருத்துக.

| | | | | a | b | c | d |
|---|---|---|---|---|---|---|---|
| (a) திராவிட வேதம் | - | 1. நாலடியார் | (A) | 2 | 4 | 1 | 3 |
| (b) உத்திர வேதம் | - | 2. திருவாய் மொழி | (B) | 2 | 3 | 4 | 1 |
| (c) தமிழர் வேதம் | - | 3. திருமந்திரம் | (C) | 3 | 4 | 2 | 1 |
| (d) வேளாண் வேதம் | - | 4. திருக்குறள் | **(D)** | **2** | **4** | **3** | **1** |

KALAI IAS ACADEMY

40. சரியாகப் பொருந்தியுள்ளதைத் தேர்வு செய்க.

1. மலைகளில் வாழும் பறவைகள் - மின்சிட்டு, பொன்முதுகு
2. நீர் நிலைகளில் வாழும் பறவைகள் - அரிவாள் மூக்கன், கரண்டிவாயன்
3. சமவெளிகளில் வாழும் பறவைகள் - ஊசிவால் வாத்து, தாலைக்கோழி

(A) 1 மட்டும் சரி **(B) 1 மற்றும் 2 சரி** (C) 3 மட்டும் சரி (D) அனைத்தும் சரி

41. கீழ்க்காணும் சொற்களின் பொருளுக்கு எதிராகப் பொருந்தியதைக் காண்க.

**(A) மகடூஉ - ஆடூஉ**

(B) அந்தம் - இறுதி

(C) வெம்மை - சூடு

(D) அருகு - குறைதல்

42. அரி என்ற சொல்லின் அருஞ்சொற்பொருள்.

(A) சிங்கம், அரிதல், தேவர்

(B) பரல், அறிவு, திருமால்

**(C) சிங்கம், பரல், திருமால்**

(D) திருமால், பரல், தேவர்

43. பொருத்துக.

| | | | | a | b | c | d |
|---|---|---|---|---|---|---|---|
| (a) கருவிழி | - | 1. இனமிகல் | (A) | 4 | 2 | 1 | 3 |
| (b) பெரியன் | - | 2. ஈறுபோதல் | (B) | 2 | 1 | 4 | 3 |
| (c) பாசிலை | - | 3. இடையுகரம் இ ஆதல் | **(C)** | **2** | **3** | **4** | **1** |
| (d) கருங்குயில் | - | 4. ஆதி நீடல் | (D) | 2 | 4 | 3 | 1 |

44. கல்லைப் பிசைத்து கனியாக்கும் செந்தமிழின் சொல்லை மணியாகத் தொடுத்தவனும் நீதானே என கூறியவர்.

**(A) கவிமணி** (B) பாரதி (C) பாரதிதாசன் (D) இராமலிங்கனார்

KALAI IAS ACADEMY

45. போலிப் புலவர்களை குட்டுபவர், செவியறுப்பவர், தலையை வெட்டுபவர் என முறையே அமைந்த விடைகளைத் தேர்க.

(A) அதி வீரராம பாண்டியர், ஒட்டக்கூத்தர், வில்லிப்புத்தூரார்

**(B) அதி வீரராம பாண்டியர், வில்லிப்புத்தூரார், ஒட்டக்கூத்தர்**

(C) ஒட்டக்கூத்தர், அதி வீரராம பாண்டியர், வில்லிப்புத்தூரார்

(D) ஒட்டக்கூத்தர், வில்லிப்புத்தூரார், அதி வீரராம பாண்டியர்

46. கீழ்க்கண்டவற்றுள் சரியற்ற கூற்றைத் தேர்வு செய்க.

(A) தமிழ்மொழியிலுள்ள அறநூல்களுள் முதன்மையானது திருக்குறள்

**(B) திருக்குறள் நூற்றெழுபது மொழிகளில் மொழிபெயர்க்கப்பட்டுள்ளது**

(C) மனிதன் மனிதனாக வாழ மனிதனுக்கு கூறிய அறவுரைதான் திருக்குறள்

(D) சுருங்கச்சொல்லி விளங்க வைப்பதில் வல்லவர் திருவள்ளுவர்

47. தவறான இணையைக் காண்க.

(A) தமிழ்கெழு கூடல் - புறநானூறு

(B) தமிழ் வேலி - பரிபாடல்

(C) பண்ணொடு தமிழொப்பாய் - தேவாரம்

**(D) கூடலில் ஆய்ந்த ஒண்தீந் தமிழன் - புறநானூறு**

48. வருணன் மதுரையை அழிக்க ஏழுமேகங்களை அனுப்பியதாகவும் பாண்டிய மன்னன் மதுரையைக் காக்கும்படி இறைவனிடம் முறையிட இறைவன் நான்கு மேகங்களையும் நான்கு மாடங்களாக அமைத்து மதுரையைக் காத்தமையால் மதுரைக்கு நான்மாடக்கூடல் எனப் பெயர் வந்ததாகக் கூறியவர்?

(A) சீத்தலைச் சாத்தனார் **(B) பரஞ்சோதியார்**

(C) நல்லூர் நத்தத்தனார் (D) இளங்கோவடிகள்

KALAI IAS ACADEMY

49. “உன் வாழ்வைப் பற்றி பெரிதாக எண்ணாதே” என்று கூறியவர் யார்?

(A) காந்தி (B) மு.வ

(C) திரு.வி.க **(D) கடுவெளி சித்தர்**

50. கெலன் கெல்லரின் ஆசிரியர் யார்?

(A) பாலி தாம்சன் (B) ஜோசப் செபர்சன்

**(C) அன்னி சல்லிவான்** (D) கிரகாம்பெல்

51. பொருந்தாத ஒன்றைத் தேர்க.

(A) சிறுபாணாற்றுப்படை (B) பெரும்பாணாற்றுப்படை

(C) திருமுருகாற்றுப்படை **(D) பட்டினப்பாலை**

52. தவறான இணையைத் தேர்ந்தெடு

(A) தருமசேனர் - திருநாவுக்கரசு

(B) ஆளுடைய நம்பி - சுந்தரர்

**(C) தொண்டர்சீர் பரவுவார் - மாணிக்கவாசகர்**

(D) உத்தமசோழப் பல்லவராயர் - சேக்கிழார்

53. “வெஞ்சின வாலி மீளான், வாலும் போய் வீழ்ந்தன்றே” என்ற கம்பராமாயணப் பாடலில் அனுமன் இகழ்ச்சி மேலிட யாரை நகைப்பிற்கு உரியவன் ஆக்குகிறான்.

(A) சுக்ரீவன் **(B) ராவணன்** (C) வாலி (D) சூர்ப்பனகை

54. அழகன் ஓவியம் வரைந்தான் என்பதன் வாக்கிய வகையைக் காண்க.

**(A) தன் வினை** (B) பிற வினை

(C) உணர்ச்சி வாக்கியம் (D) செயப்பாட்டு வினை

KALAI IAS ACADEMY

55. கவிஞர் கண்ணதாசனின் புனைப்பெயர்கள் எவை?

I. கமகப்பிரியா

II. சத்தி முத்தப் புலவர்

III. ஆரோக்கிய சாமி

IV. வணங்கா முடி

V. பார்வதி நாதன்

(A) I, II, IV மட்டும்

**(B) I, III, IV, V மட்டும்**

(C) I, III, V மட்டும்

(D) I,II, III, IV, V

56. சந்திப்பிழை இல்லாதத் தொடரைக் கண்டறிக.

(A) ஆசிரியர் பெயரை தம் பெயருடன் சேர்த்து பீமாராவ் அம்பேத்கராக மாறினார்

(B) ஏழைகளுக்கு பொருள் பெறாமல் வாதாடி நீதி பெற்று தந்தார் அம்பேத்கர்

**(C) இலட்சியக் கனவுகளை அறிவுத்திறத்தினால் உறுதிப்படுத்தியவர் அம்பேத்கர்**

(D) சமுதாயத்தில் புறக்கணிக்கப்பட்ட மக்களுக்காக தன்னை அர்பணித்துக் கொண்டவர் அம்பேத்கர்

57. முதுமொழிக்காஞ்சி பற்றி கீழ்காணும் கூற்றுகளில் சரியானது.

I. இது அறவுரைக் கோவை என்றும் வழங்கப்படுகிறது

II. பத்து அதிகாரங்கள் உள்ளன.

III. உலகியல் உண்மைகளைத் தெளிவாக எடுத்தியம்புகிறது

IV. இந்நூல் காஞ்சி திணையின் துறைகளுள் ஒன்று

(A) I மற்றும் II சரி

(B) II மற்றும் III சரி

(C) I, II மற்றும் III சரி

**(D) அனைத்தும் சரியானவை**

KALAI IAS ACADEMY

58. வல்லினம் மிகா இடங்களில் தவறானது எது?

1. வினைத் தொகையில் வல்லினம் மிகும்
2. உம்மைத் தொகையில் வல்லினம் மிகும்
3. விளித்தொடரை அடுத்துவரும் வல்லினம் மிகாது
4. மூன்றாம் வேற்றுமை உருபுகளின் பின் வல்லினம் மிகாது

(A) 2 மற்றும் 4 (B) 1மற்றும் 3

(C) 1 மற்றும் 4 **(D) எதுவுமில்லை**

59. நளவெண்பாவில் கூறப்பட்ட காண்டங்கள் மற்றும் வெண்பாக்களின் எண்ணிக்கை?

(A) 10 மற்றும் 4350

(B) 5 மற்றும் 412

**(C) 3 மற்றும் 431**

(D) 3 மற்றும் 5027

60. அறம், பொருள், இன்பம், வீடு என்னும் உறுதிப் பொருள்கள் நான்கினையும் உணர்த்தி மக்களை நல்வழிப்படுத்தும் நூல்கள் எவ்வாறு அழைக்கப்படுகிறது?

**(A) பேரிலக்கியங்கள்** (B) சிற்றிலக்கியங்கள்

(C) பிரபந்தங்கள் (D) பாட்டியல் நூல்கள்

61. நடுத் திராவிட மொழிகளில் பொருந்தாதது எது?

(A) கோண்டா (B) கோலாமி

(C) கோயா **(D) கோத்தா**

62. தீ என்ற ஒரெழுத்து ஒரு மொழிச் சொல் குறிக்காத பொருளைத் தேர்வு செய்க.

(A) அறிவு (B) இனிமை (C) தீமை **(D) வலிமை**

KALAI IAS ACADEMY

63. "Court Fee stamp" - தமிழ் சொல் தருக?

(A) நீதிமன்ற வில்லை

(B) நீதிமன்றக் கட்டணம்

(C) நீதிமன்றக் கட்டண ரசீது

**(D) நீதிமன்றக் கட்டண வில்லை**

64. "வான்கலந்த மாணிக்க வாசகர் நின் வாசகத்தை

நான்கலந்து பாடுங்கால் நற்கருப்பஞ் சாற்றினிலே" - என்ற வரியை பறைசாற்றியவர்?

(A) குமரகுருபரர்

(B) மாணிக்கவாசகர்

(C) திருநாவுகரசர்

**(D) இராமலிங்க அடிகள்**

65. தமிழ் நாட்டில் ஓதுவார்கள் பாடும் இசைத் தமிழ் பாடல்கள்.

(A) நாலாயிரத் திவ்வியப் பிரபந்தம்

(B) சமகாலத்துப் பாடல்கள்

**(C) தேவாரப் பாடல்கள்**

(D) வேதகாலத்துப் பாடல்கள்

66. சைவத் திருமுறைப் பன்னிரண்டனுள் எட்டாம் திருமுறையில் உள்ளவை?

(A) திருப்பாவை, திருவாசகம்

**(B) திருவாசகம், திருக்கோவை**

(C) திருமந்திரம், திருவிசைப்பா

(D) திருப்பாவை, திருக்கோவை

67. இசையாயிரம், உலா, மடல் போன்ற நூல்களை இயற்றியவர் யார்?

(A) ஒட்டக்கூத்தர்

**(B) சயங்கொண்டார்**

(C) கம்பர்

(D) மருள் நீக்கியார்

68. தமிழின் முதல் ஏளன நூல்?

**(A) பரமார்த்த குருகதை**

(B) வியாசர் விருந்து

(C) சில நேரங்களில் சில மனிதர்கள்

(D) அலை ஓசை

KALAI IAS ACADEMY

69. செயப்பாட்டு வினைத்தொடரில் அமையும் சொற்களின் சரியான வரிசையைத் தேர்வு செய்க.

**(A) செயப்படுபொருள், எழுவாய், பயனிலை**

(B) செயப்படுபொருள், பயனிலை, எழுவாய்

(C) பயனிலை, செயப்படுபொருள், எழுவாய்

(D) எழுவாய், பயனிலை, செயப்படுபொருள்

70. தமிழ் இலக்கணம் படிக்கப் படிக்க விருப்பத்தை உண்டாக்கும் என்று கூறியவர்?

(A) மாக்சுமுல்லர் (B) எமினோ **(C) கெல்லட்** (D) கமில்சுவலபில்

71. மூவலூர் இராமாமிர்தம் அம்மையாரின் நினைவைப் போற்றும் வகையில் அவரது பெயரால் ஏழைப் பெண்களுக்கான திருமண உதவித் திட்டத்தினை தமிழக அரசு எந்த ஆண்டு முதல் வழங்கி வருகிறது?

(A) 1983 (B) 1985 (C) 1987 **(D) 1989**

72. கீழ்க்காணும் வாக்கியங்களைக் கவனி.

I. பகைவேந்தர் இருவரும் வெற்றி ஒன்றையே குறிக்கோளாகக் கொண்டு போரிடுவது தும்பைத் திணை

II. தன் நாட்டைக் கைப்பற்ற வந்த மாற்றரசனோடு எதிர்த்துப் போரிடல் காஞ்சித் திணை

(A) I மட்டும் சரி (B) I, II சரியல்ல

(C) II மட்டும் சரி **(D) I, II சரி**

73. திரு.வி.க விற்கு வாய்த்த மொழி நடை மலை எனத் தமிழுலகில் ஓங்கி உயர்ந்துள்ளது என்று பாராட்டியவர் யார்?

(A) மு. வ **(B) தெ.பொ. மீனாட்சி சுந்தரனார்**

(C) மகாவித்துவான் மீனாட்சி சுந்தரனார் (D) அண்ணா

KALAI IAS ACADEMY

74. பொருந்தாத வேர்ச்சொல்லைக் காண்க.

(A) கண்டு - காண்

**(B) கெடுத்தான் - கெட்ட**

(C) தந்தாள் - தா

(D) படிப்பித்தான் - படிப்பி

75. 'பெரியபுராணம்' எழுதிடத் துணை நின்ற நூல் எது?

**(A) திருத்தொண்டத்தொகை**

(B) திருவாசகம்

(C) தேவாரம்

(D) திருவெம்பாவை

76. கீழுள்ள நூற்பட்டியலில் கவிக்கோ அப்துல் ரகுமான் எழுதிடாத நூலின் பெயர் என்ன?

(A) நேயர் விருப்பம்

(B) சொந்தச் சிறைகள்

(C) பால் வீதி

**(D) இன்னொரு சிகரம்**

77. தாகத்திற்கு நீர்தருவதில் ஒன்றுமில்லை, தீமை செய்தவர்க்கும் நன்மையே செய் உண்மைப் பொருண்மை உண்டு என்ற இன்னா செய்யாமை கருத்தைக் காந்தியடிகள் பெறக் காரணமாக இருந்து நிகழ்வு எது?

(A) திருக்குறள்

(B) உன்னுள் இருக்கும் ஆண்டவனின் அரசு

**(C) குஜராத்தி பாடல்**

(D) இயேசு நாதரின் மலை சொற்பொழிவு

78. 20 – ம் நூற்றாண்டின் இலக்கிய மறுமலர்ச்சிக்கு வித்திட்டவர்.

**(A) ஷெல்லிதாசன்**

(B) கவிமணி

(C) வாணிதாசன்

(D) பாரதிதாசன்

KALAI IAS ACADEMY

79. உவமைக்கு ஏற்ற பொருத்தமான பொருளைத் தேர்ந்தெடுத்து எழுதுக

"உலக நிலைகளை அறியாதிருத்தல்"

(A) கீரியும் பாம்பும் போல

(B) இலவு காத்த கிளி போல

**(C) கிணற்றுத் தவளை போல**

(D) அனலிடைப்பட்ட புழு போல

80. சொற்களை ஒழுங்குபடுத்தி சொற்றொடராக்குதல். கீழ்க்கண்டவற்றில் எது சரியானது?

(A) துலங்கிடும் குளிர்ந்த பார்வை துரும்பென மெலிந்த தேகம்

(B) குளிர்ந்த பார்வை துலங்கிடும் துரும்பென மெலிந்த தேகம்

**(C) துரும்பென மெலிந்த தேகம் துலங்கிடும் குளிர்ந்த பார்வை**

(D) துரும்பென துலங்கிடும் தேகம் மெலிந்த குளிர்ந்த பார்வை

81. பாவேந்தர் நினைவுப் பரிசு பெற்ற முதற்பாவலர் யார்?

(A) பாவலரேறு **B) உவமைக்கவிஞர்**

(C) காந்தியக் கவிஞர் (D) உருவகக் கவிஞர்

82. இன்னிசை வெண்பாவிற்கு பொருத்தமான கூற்றைத் தேர்க?

I . வெண்பாவின் பொது இலக்கணம் பெற்று தனிச்சொல் இன்றி நான்கடிகள் உடையதாய் வரும்

II . இரண்டாம் அடியின் இறுதியில் தனிச்சொல் பெற்று மூன்று விகற்பம் பெற்று வரும்

(A) I மட்டும் சரி **(B) I , II சரி**

(C) II மட்டும் சரி (D) I , II தவறு

KALAI IAS ACADEMY

83. கவிஞர் ராசேந்திரன் உடன் தொடர்பற்றக் கூற்றைக் கண்டறிக.

**(A) ராசேந்திரன் கவிதைகள், சுவரும் சுண்ணாம்பும், ஊசிகள், இவரது கவிதைகளாகும்**

(B) வா இந்தப்பக்கம், மீரா கட்டுரைகள் இவரின் கட்டுரைகளாகும்

(C) தமிழ் வளர்ச்சிக் கழகப் பரிசு, சிற்பி இலக்கிய விருது பெற்றவர்

(D) ராசேந்திரன் கவிதைகள் நாற்பத்தைந்து கவிதைகள் கொண்டது

84. ‘‘ஆய்ந்த நாவலன் போய் விழுந் தாழ்ந்தனன் அவனைக்

காய்ந்த நாவலன் இம்மென திருவுருக் கரந்தான்’’ என்ற பாடலில் ஆய்ந்த நாவலன் மற்றும் காய்ந்த நாவலன் யார்?

(A) இறைவன், நக்கீரன்

(B) நக்கீரன், தருமி

**(C) நக்கீரன், இறைவன்**

(D) இறைவன், தருமி

85. மீனவர் பாடலின் ஒப்புமைகளில் தவறானதைத் தேர்க.

(A) விளக்கு - விடிவெள்ளி

**(B) கூரை - வானம்**

(C) தோழன் - கடலலை

(D) பஞ்சுமெத்தை - வெண்மணல்

86. பொருத்துக:

(a) திரு.வி.க - 1.எனது இலங்கைச் செலவு

(b) மு.வ - 2.யான் கண்ட இலங்கை

(c) ஏ.கே.செட்டியார் - 3.உலகம் சுற்றிய தமிழன்

(d) ஜி.டி.நாயுடு - 4.நான் கண்ட ஜப்பான்

| | a | b | c | d |
|---|---|---|---|---|
| (A) | 4 | 3 | 1 | 2 |
| (B) | 2 | 1 | 3 | 4 |
| **(C)** | **1** | **2** | **3** | **4** |
| (D) | 1 | 2 | 4 | 3 |

KALAI IAS ACADEMY

87. பொருத்துக.

| | | |
|---|---|---|
| (a) மா முன் நேர் | - | 1. கலித்தளை |
| (b) விள முன் நேர் | - | 2. வெண்சீர் வெண்டளை |
| (c) மா முன் நிரை | - | 3. இயற்சீர் வெண்டளை |
| (d) காய் முன் நேர் | - | 4. நிரையொன்றிய ஆசிரியத் தளை |
| (e) காய் முன் நிரை | - | 5. நேரொன்றிய ஆசிரியத்தளை |

| | a | b | c | d | e |
|---|---|---|---|---|---|
| (A) | 1 | 2 | 3 | 4 | 5 |
| **(B)** | **5** | **4** | **3** | **2** | **1** |
| (C) | 5 | 3 | 4 | 2 | 1 |
| (D) | 5 | 4 | 2 | 3 | 1 |

88. ''இறந்தார் இறந்தார் அனையர் சினத்தை

துறந்தார் துறந்தார் துணை'' எனும் குறட்பாவில் பயின்று வந்துள்ள பொருள்கோள் வகை காண்க?

(A) விற்பூட்டு பொருள்கோள்

(B) அளை மறி பாப்புப் பொருள்கோள்

**(C) தாப்பிசைப் பொருள்கோள்**

(D) கொண்டு கூட்டுப் பொருள்கோள்

89. ஈற்றடியின் ஈற்றுச்சீர் ஏகாரத்தில் முடிவது எவ்வகைப் பா எனக் கூறுக.

(A) வெண்பா

**(B) ஆசிரியப்பா**

(C) குறள் வெண்பா

(D) விருத்தப்பா

KALAI IAS ACADEMY

90. ஒவ்வொரு பாடலிலும் உள்ள இறுதி எழுத்தோ, அசையோ, சீரோ, அடியோ அதற்கு அடுத்து வரும் பாடலின் முதலாக வரும்படி அமைத்துப் பாடுவது ----------------- எனப்படும்.

(A) கலம்பகம் **(B) அந்தாதி** (C) உலா (D) பள்ளு

91. வீரமாமுனிவர் தொகுத்த சதுரகராதியில் 'சதுர்' என்பதன் பொருள்?

(A) அறம், பொருள், இன்பம், வீடு (B) கல்வி, செல்வம், வீரம், கொடை

**(C) பெயர், பொருள், தொகை, தொடை** (D) மனம், புத்தி, சித்தம், அகங்காரம்

92. தமிழை வளர்க்க வேண்டும் என்றால் பிறமொழியை வெறுக்க வேண்டும் என்பது பொருளன்று என்று கூறியவர்.

(A) பெரியார் **(B) திரு.வி.க**

(C) பாவாணர் (D) மகாத்மா காந்தி

93. அகில இந்திய காங்கிரஸ் தலைவராக காமராசர் பொறுப்பேற்ற மாநாடு மற்றும் வருடம்?

(A) லாகூர் - 1929 (B) கல்கத்தா - 1949

**(C) புவனேசுவர் - 1963** (D) சென்னை - 1962

94. வடமொழிக்கு ஈடாக நடிப்புச் செவ்வியும், இலக்கியச் செவ்வியும் ஒருங்கே அமையப்பெற்றது?

(A) கம்பராமாயணம் (B) நளவெண்பா

**(C) மனோன்மணீயம்** (D) தேம்பாவணி

95. கீழ்க்கண்டவற்றுள் வள்ளலார் குறித்த கூற்றுகளுள் மிகச் சரியாகப் பொருந்தாத ஒன்றைத் தேர்வு செய்க.

(A) "உயிரக்கமே பேரின்ப வீட்டின் திறவுகோல்" என்றார்

(B) இவர் புரட்சித் துறவி எனப் போற்றப்பட்டார்

(C) பாரதியார் இவரை புதுநெறி கண்ட புலவர் என்று போற்றினார்

**(D) இவர் "தென்னிந்திய சமூகச் சீர்திருத்தத்தின் தந்தை" என அழைக்கப்பட்டார்**

KALAI IAS ACADEMY

96. ஏழாம் வேற்றுமை உருபு இடம் பெற்றுள்ள சொற்றொடர் எது?

(A) முட்புதர்

(B) கன்னிபாலன்

**(C) கொத்துப்பூ**

(D) பதத்துணை

97. ஆனந்தரங்கர் முன்னிலையில் தமது இராமநாடகத்தைத் அரங்கேற்றியவர்?

(A) இராமச்சந்திரக் கவிராயர்

(B) இராமனுஜக் கவிராயர்

**(C) அருணாச்சலக் கவிராயர்**

(D) சீனிவாசக்கவி

98. தொல்காப்பியத்தைப் படித்துப் படித்து என் தொல்லையெல்லாம் மறந்தேன்; வள்ளுவர் குறளைப் படித்து என் உள்ளம் தழைத்தேன் என்றவர்?

**(A) ரா.பி. சேதுப்பிள்ளை**

(B) சி.வை. தாமோதரம் பிள்ளை

(C) டி.கே. சிதம்பர முதலியார்

(D) பண்டிதமணி மு. கதிரேசன்செட்டியார்

99. தேனினும் இனிய தீந்தமிழ்ப் பனுவல் என்றழைக்கப்படும் நூல்?

(A) திருக்கோவை

(B) திருவாசகம்

**(C) நாலாயிர திவ்யப் பிரபந்தம்**

(D) பெரியபுராணம்

100. நம் மொழியையும் நாட்டையும் போற்றுவதற்காக பிற மொழியையும் நாட்டையும் தூற்றாதே, பழிக்காதே, வெறுக்காதே என அறிவுரை கூறியவர் யார்?

**(A) மு.வ**

(B) திரு.வி.க

(C) மறைமலையடிகள்

(D) ரா.பி.சேதுப்பிள்ளை

KALAI IAS ACADEMY

101. பின்வருவனவற்றில் தவறான இணை எது?

(A) ஒளிச்செறிவு - கேண்டிலா

(B) மின்திறன் - வாட்

**(C) திண்மக் கோணம் - ரேடியன்**

(D) வேலை - ஜூல்

102. கீழ்க்கண்டவற்றில் எது/எவை தவறானவை?

I. இந்தியக் குடியரசுத்தலைவர் பதவியை, ஒருவர் எத்தனை முறை வேண்டுமானாலும் வகிக்கலாம்

II. அமெரிக்க நடைமுறையில் குடியரசுத்தலைவராக ஒருநபர் இரண்டுமுறைக்கு மேல் பதவி வகிக்க முடியாது

III. இந்தியாவில் இருமுறை குடியரசுத்தலைவர் பதவி வகித்தவர் ராதாகிருஷ்ணன்

IV. இந்திய துணைக்குடியரசுத்தலைவர் பதவியை, ஒருவர் இருமுறை மட்டுமே வகிக்க முடியும்

(A) II, III மட்டும் **(B) III, IV மட்டும்**

(C) II, IV மட்டும் (D) IV மட்டும்

103. கீழ்க்கண்டவர்களில் துணைக் குடியரசுத்தலைவர் பதவி வகித்தவர்களை காலமுறைப்படி வரிசைப்படுத்துக.

I. வெங்கட்ராமன்

II. கிருஷ்ணகாந்த்

III. பைராவன் சிங் செகாவாத்

IV. இதயதுல்லா

(A) I, IV, III, II (B) I, IV, II, III **(C) IV, I, II, III** (D) IV, I, III, II

KALAI IAS ACADEMY

104. பொருத்துக.

(a) பச்சையமுள்ள தாலோபைட்டா - 1. டெரிடோபைட்டுகள்

(b) பச்சையமற்ற தாலோபைட்டா - 2. ஆல்காக்கள்

(c) வாஸ்குலார் கிரிப்டோகேம் - 3 பிரையோபைட்டுகள்

(d) வாஸ்குலார் அற்ற கிரிப்டோகேம் - 4. பூஞ்சைகள்

| | a | b | c | d |
|---|---|---|---|---|
| (A) | 2 | 1 | 4 | 3 |
| **(B)** | **2** | **4** | **1** | **3** |
| (C) | 1 | 2 | 3 | 4 |
| (D) | 1 | 3 | 2 | 4 |

105. $x+\frac{1}{x}$ ன் சராசரி M எனில் $x^2+\frac{1}{x^2}$ ன் சராசரி காண்க.

(A) 1-$M^2$ (B) 1-2M **(C) $2M^2$ -1** (D) $2M^2$ +1

106. (A+B) ன் 20% = B 50% எனில் $\frac{2A-B}{2A+B}$ = ?

**(A) $\frac{1}{2}$** (B) $\frac{1}{3}$ (C) $\frac{1}{4}$ (D) 1

107. பின்வருவனவற்றுள் பெரிய எண் எது?

$\sqrt[2]{8}$, $\sqrt[4]{13}$, $\sqrt[5]{16}$, $\sqrt[10]{41}$

**(A) $\sqrt[2]{8}$** (B) $\sqrt[4]{13}$ (C) $\sqrt[5]{16}$ (D) $\sqrt[10]{41}$

108. நைலான் -6, 6 தயாரிக்கப்பயன்படும் அமிலம் எது?

**(A) அடிப்பிக் அமிலம்** (B) தாலிக் அமிலம்

(C) சாலிசிலிக் அமிலம் (D) அசிட்டிக் அமிலம

KALAI IAS ACADEMY

109. கீழ்க்கண்டவற்றில் சரியற்றதைத் தேர்க.

I. RNA ஒற்றை இழையாலான நியூக்ளிக் அமிலமாகும்

II. RNA – வின் நைட்ரஜன் காரங்கள் அடினைன், யுரோசில், குவானைன் (ம) சைட்டோசின்

III. இவை உட்கருவில் காணப்படுகின்றன

IV. இதில் m RNA, t RNA (ம) r RNA என மூன்று வகைகள் காணப்படுகின்றன

(A) I மற்றும் III

(B) II மற்றும் IV

**(C) III மட்டும்**

(D) I மட்டும்

110. வ.உ.சி சிதம்பரம்பிள்ளை குறித்த கூற்றுகளில் சரியற்ற கூற்றைத் தேர்வு செய்க.

(A) வ.உ.சி சுதேசி கூட்டுறவு அங்காடிகளைத் தூத்துக்குடியில் தோற்றுவித்தார்

(B) 1905-ல் வங்கப்பிரிவினை வ.உ.சியை அரசியலில் ஈடுபடச் செய்தது

(C) 1907-ஆம் ஆண்டு சூரத் காங்கிரஸ் மாநாட்டில் கலந்து கொண்டார்

**(D) சூரத் பிளவின் போது வ.உ.சி கோபாலகிருஷ்ண கோகலே - வை ஆதரித்தார்**

111. பொருத்துக.

| | | | | a | b | c | d | e |
|---|---|---|---|---|---|---|---|---|
| (a) போர்டாக்ஸ் கலவை - | 1. பூச்சிக்கொல்லி | (A) | | 4 | 3 | 1 | 2 | 5 |
| (b) எண்டோ சல்பான் - | 2. சிற்றுயிர்க்கொல்லி | **(B)** | | **3** | **1** | **4** | **5** | **2** |
| (c) ஆர்சனிக் - | 3. பூஞ்சைக்கொல்லி | (C) | | 5 | 3 | 1 | 2 | 4 |
| (d) மெட்டாகுளோர் - | 4. எலிக்கொல்லி | (D) | | 1 | 5 | 4 | 3 | 2 |
| (e) மாலத்தியான் - | 5. களைக்கொல்லி | | | | | | | |

112. சர்வதேச ஒலிம்பிக் கவுன்சில் உறுப்பினர் பதவிக்குத் தேர்ந்தெடுக்கப்பட்ட இந்தியப் பெண்.

(A) பி.வி. சிந்து

(B) ஆனந்தி பென் படேல்

(C) டிண்டு லூக்கா

**(D) நீதா அம்பானி**

KALAI IAS ACADEMY

113. பொருத்துக.

| வரிசை I | | வரிசை II | | a | b | c | d |
